# விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
# தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை

# பதவி வெற்றிடம்

**தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் மாதிரி தென்னந்தோட்ட சேவையின் உதவி தோட்ட முகாமையாளர் (மா.தெ.தோ.) JM1-2(ஒப்பந்தம்) இற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**உதவி தோட்ட முகாமையாளர் (மா.தெ.தோ.) JM1-2 (ஒப்பந்தம்)**

உதவி முகாமையாளர் (தோட்டம்) மா.தெ.தோ. பதவிக்காக செயற்பாடு அடிப்படையில் வருடாந்தம் நீடிப்பதற்கு உட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் 03 வருடத்திற்கு உதவி தோட்ட முகாமையாளர் (மா.தெ.தோ.) JM1-2 இற்காக சேர்த்துக் கொள்ளல்.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட விவசாய/பெருந்தோட்ட முாகமைத்துவப் பட்டம் மற்றும் அரச அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் தென்னத் தோட்ட முகாமைத்துவம் பற்றிய 04 வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

- செயற்பாட்டின் அடிப்படையில் வருடாந்தம் நீடிக்கக் கூடியமைக்கு உட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் 03 வருடத்திற்கு உதவி தோட்ட முகாமையாளர் (மா.தெ.தோ.) JM1-2 பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.
- சம்பளம்: ரூ. 43,355/- (கனிஷ்ட முகாமைத்துவம் (JM1-2) சேவை வகுதியின் ஆரம்ப சம்பளம்
- பதவிகளின் எண்ணிக்கை: 04 (ஒப்பந்தம்)
- சேர்த்துக் கொள்ளும் முறைமை: கட்டமிடப்பட்ட நேர்முகத் தேர்வு

**வேறு நிபந்தனைகள்:-**

I. சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவது போலவே நாட்டில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தேவையான உடல் உளத் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.
III. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்:-**

அதனடிப்படையில் 2024.02.26ம் திகதிக்கு மேற்படி தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் கீழே உள்ள இணையதளத்தில் உள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் அல்லது தம்மால் தயாரிக்கப்பட்ட மாதிரியைப் பாவித்து விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். அவ்வாறு கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய விபரங்களை உள்ளடக்கியதாக அத் தகைமைகளை உறுதி செய்யக் கூடிய சான்றிதழ்களின் உறுதி செய்த பிரதியுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியைக் குறிப்பிடுதல் கட்டாயமானது அவ்வாறு கோரப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சகல விண்ணப்பங்களும் 2024.02.26 அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், தென்னைபயிர்செய்கை சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது பற்றி குறித்த ஆட்சேர்ப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். இப் பதவி பற்றி மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட விசாரணைகள் அதற்கான தகைமையாகக் கருதப்பட்டு நடவடிக்கையெடுக்கப்படும்.

**தலைவர்,**
**தென்னைப் பயிர்ச் செய்கை சபை,**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**பத்தரமுல்ல.**

மேற்படி பதவிக்காக குறித்த விண்ணப்பப்படிவத்தை கீழ்க்காணும் இணைய தளத்தில் பதவிறக்கம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஏதேனும் சிரமங்கள் ஏற்படின் தம்மால் தயாரிக்கப்பட்ட மாதிரியைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துக் கொள்கிறேன். https://coconutsrilanka.lk/